## அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி , கோயம்புத்தூர்– 641014

முதலாமாண்டு சேர்க்கை

### கலந்தாய்வு அழைப்புக் கடிதம்
### (Counselling Call Letter)

| SSLC | /500 |
| --- | --- |
| COMMUNITY | |

கடித எண் : 1210 / சி1 /2024 நாள் : 30.05.2024

பொருள் : அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி , கோயம்புத்தூர் – 14 , 2024- 2025 ஆம் கல்வியாண்டு - முதலாமாண்டு முழுநேர டிப்ளமோ - மாணவர்கள் சேர்க்கை – கலந்தாய்வு - சம்பந்தமாக.,

*****

1. 2024- 2025 ஆம் கல்வியாண்டிற்கு, இப்பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாமாண்டு முழு நேர டிப்ளமோ வகுப்பில் சேருவதற்கு செல்வன்/செல்வி.................................................. என்பவர் கலந்தாய்விற்கு அழைக்கப்படுகிறார். இது கலந்தாய்வுக்கான அழைப்புக்கடிதம் மட்டுமே. இக்கடிதம் மாணவர் சேர்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் கடிதம் அல்ல.

2. தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களின் ஆணைப்படி முதலாமாண்டு சேரும் பொழுதே பாடப்பிரிவு ( Branch of study ) ஒதுக்கப்பட உள்ளது .பாடப்பிரிவு ஒதுக்கீடு, மாணவர் பத்தாம் வகுப்பில் பெற்றுள்ள மொத்த மதிப்பெண்களின் அடிப்படையிலும், அவருடைய இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்யப்படும். அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு மாணவரும், அவருடைய பெற்றோரும் ஒப்புதல் அளித்த பின்பு அவருடைய சேர்க்கை உறுதி செய்யப்படும்.

3. மேற்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு 03.06.2024 அன்று காலை/~~மதியம்~~ 10 மணிக்கு நடைபெறும் கலந்தாய்வில் மாணவர்கள் கலந்து கொள்ளும்படி தெரிவிக்கலாகிறது.

4. கலந்தாய்விற்கு வரும் பொழுது கீழ்க்கண்ட அசல் சான்றிதழ்கள் ( Original Certificates ) கொண்டு வர வேண்டும் :

அ) எஸ் .எஸ். எல். சி மதிப்பெண் சான்றிதழ் (அசல் மற்றும் நகல்கள் – 5 எண்ணிக்கை)

ஆ) பள்ளி மாற்றுச்சான்றிதழ் (அசல் மற்றும் நகல்கள் - 5 எண்ணிக்கை)
(மாணவர் கடைசியாக படித்த பள்ளியில் கொடுக்கப்பட்ட மாற்றுச் சான்றிதழ்)

இ) சாதிச்சான்றிதழ் (அசல் மற்றும் நகல்கள் - 5 எண்ணிக்கை)

ஈ) ஆதார் அட்டை (அசல் மற்றும் நகல்கள் - 3 எண்ணிக்கை)

உ) பாஸ்போர்ட் அளவு போட்டோ - 4 எண்ணிக்கை (விடுதி சேர்க்கை வேண்டுவோர் கூடுதலாக 1 நகல் அளிக்க வேண்டும்)

2021-ல் 10ம் வகுப்பு தேறியவர்கள் கட்டாயம் 9-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் கொண்டு வரவேண்டும்.

குறிப்பு : மாணவர் ஏதாவதொரு பள்ளியிலோ /கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தால் அசல் சான்றிதழ்கள் கொண்டு வர வேண்டாம். நகல்கள் மட்டுமே போதுமானது. ஆனால் தற்சமயம் பயிலும் கல்வி நிறுவனத்தலைவரிடமிருந்து அத்தாட்சி சான்றிதழ் **(Bonafide Certificate)** பெற்று வர வேண்டும்.பாடப்பிரிவு ஒதுக்கீடு ஒத்துக்கொள்ளப்பட்டால் தற்சமயம் பயிலும் பயிலகத்திலிருந்து அசல் சான்றுகள் பெற்றுவர அவகாசம் அளிக்கப்படும்.

5. சேர்க்கை அனுமதி பெற்ற மாணவர்கள் கலந்தாய்வு நடைபெறும் நாள் அன்றே கீழ்க்கண்ட கட்டணங்களை செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறப்புக்கட்டணம் (ஒரு ஆண்டுக்கு) | ரூ. | 1000.00 |
| 2. | வளர்ச்சிக் கட்டணம் | ரூ. | 1000.00 |
| 3. | எச்சரிக்கை முன் கட்டணம் | ரூ. | 50.00 |
| 4. | மாணவர் சேர்க்கை கட்டணம் | ரூ. | 2.00 |
| 5. | மதிப்பெண் சரிபார்க்கும் கட்டணம் (ஒன்றுக்கு) (50)<br>Completed SSLC before Mar -2020 | ரூ. | 50.00 |
| 6. | நாட்டுநலப்பணித் திட்டம் | ரூ. | 10.00 |
| 7. | செஞ்சிலுவைச் சங்கம் | ரூ. | 20.00 |
| 8. | கொடிநாள் | ரூ. | 5.00 |
| 9. | ஆயுள் காப்பீடு | ரூ. | 100.00 |
| | மொத்தம் | ரூ. | **2237.00** |

6. விடுதியில் மிகக்குறைவான காலியிடங்களே உள்ளதால் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு தொலைவு மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் விடுதி வசதி வழங்கப்படும். **MARCH-2024 இல் பத்தாம் வகுப்பு தேறிய மாணவர்களுக்கு மட்டுமே விடுதி வசதி வழங்கப்படும்.** மாணவியருக்கு தனியே விடுதி வசதி உள்ளது. விடுதியில் சேரும் மாணவ, மாணவிகள் கீழ்க்கண்டுள்ள தொகையை சேர்க்கையன்றே செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அறை வாடகை (ஒரு ஆண்டுக்கு) | ரூ. | 150.00 |
| 2. | மின்கட்டணம் (ஒரு ஆண்டுக்கு) | ரூ. | 225.00 |
| 3. | மின்சாதனங்கள் பொருத்துதல் கட்டணம் | ரூ. | 2.00 |
| 4. | சேர்க்கைக் கட்டணம் | ரூ. | 100.00 |
| 5. | விடுதி எச்சரிக்கை முன்பணம் (ஒரு ஆண்டுக்கு) | ரூ. | 3500.00 |
| 6. | விடுதி நிர்வாக கட்டணம் (ஒரு ஆண்டுக்கு) | ரூ. | 1500.00 |
| | மொத்தம் | ரூ. | 5477.00 |

*உணவு கட்டணம் தோராயமாக ஒரு நாளைக்கு ரூ.85 /- மட்டும்

*உணவு கட்டணத்தை மாணவர்கள் ஒரு பருவத்திற்கு ரூ.10000/- முன்பணமாக செலுத்த வேண்டும்.

7. விண்ணப்பத்தில் மாணவர் தவறான விவரங்களை தெரிவித்திருந்ததின் பேரில் மாணவர்சேர்க்கை அளிக்கப்பட நேர்ந்தது என்பது பின்னர் தெரிந்தாலோ, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களால் மாணவரின் சேர்க்கையினை ஏற்காத நிலை ஏற்பட்டு சேர்க்கை தள்ளுபடி செய்யப்பட்டாலோ, மாணவரது சேர்க்கை ரத்து செய்யப்பட்டுவிடும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

8. இக்கல்லூரிக்கு மாணவர்கள் சேர்க்கையின் சமயம் வரும்பொழுது கட்டாயம் பெற்றோருடன் வரவேண்டும். அசல் சான்றுகளின் நகல்களை (Xerox) "தேவையான அளவு" முன்னரே எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அவர்கள் மாணவர் சேர்க்கை அங்கீகரிக்கப்படும் வரை எக்காரணம் கொண்டும் அசல் சான்றுகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.
9. சேர்க்கைக்கு, கல்லூரிக்கு வருவதற்கு பயணப்படி கொடுக்கப்படமாட்டாது.

10. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உடன் வராத மாணவர்களுக்கு சேர்க்கை அளிக்கப்பட மாட்டாது.

முக்கிய குறிப்பு

1. மதிப்பெண் சான்றிதழ் (Mark Sheet) மாற்றுச் சான்றிதழ் (T.C) மற்றும் சாதிச் சான்றிதழ் (C.C) மூன்றிலும் மாணவர் பெயர், மாணவரது பெற்றோர் பெயர் ஒரே மாதிரி இருக்க வேண்டும்.

PRINCIPAL 30/5/24
Government Polytechnic College
COIMBATORE - 641 014